# பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் வடக்குமாதேவி கிராம ஊராட்சி கிராம ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: V.தங்கராஜ்

ந.க.எண்:1

நாள்: 05.04.2024

பொருள்: புதிய மனைப்பிரிவு - பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குமாதேவி கிராம ஊராட்சி புலஎண்.58/9, 1ஏக்கர் 82செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட நில பயன் மாற்றம் சான்றுக்கு 3% சந்தை மதிப்பு தொகை செலுத்தப்பட்டது. மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூபாய்.1000 வீதம் பெறப்பட்டது. மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை: 1. வேலப்பன் த/பெ. அய்யாவு

2. மாணிக்கம் த/பெ.மங்கப்பன்

3. கிருஷ்ணகுமார் த/பெ.பழனிவேல்

பார்வை: 2. உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை பெரம்பலூர் மண்டலம் அவர்களின் கடித எண். 57/24, நாள்: 30.01.2024.

பார்வை: 3. பதிவுத்துறை ஆவணங்கள் ஒப்படைப்பு நாள்: 07.02.2024.

-----

உத்தரவு:

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குமாதேவி ஊராட்சி கிராம புல எண்.58/9, 1 ஏக்கர் 82 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குமாறு பார்வை-1ல் காணும் மனுவில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. பார்வை 2-ல் காணும் உதவி இயக்குநர் ஊரமைப்புத்துறை பெரம்பலூர் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடம் ஆகியவற்றை தனிநபரிடம் இருந்து ஊராட்சி மன்ற தலைவர் வடக்குமாதேவி என்ற பெயருக்கு தானமாக பெற்றுக்

கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பார்வை 3-ல் காணும் 07.02.2024 - ஆம் நாளில் சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை பதிவு துறையின் மூலம் பதிவு செய்து முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2-ல் காணும் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு நில பயன் மாற்றம் சான்றிற்கு சந்தை மதிப்பு தொகையில் 3% சதவீதம் தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. பார்வை 3-ல் காணும் பதிவுத்துறை கடிதத்தில் 1 ஏக்கர் 82 செண்ட் பரப்பளவிற்கு ரூ.16100/- 3% மதிப்பு ரூபாய் [பதினாறாயிரத்து நூறு மட்டும்] 04.04.2024 அன்று மனுதாரரால் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூபாய்.1000 வீதம் பெறப்பட்டது. எனவே மேற்படி புல எண்களில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்பட்டுள்ளது.

V. தங்கராஜ்.
**தலைவர்**
தலைவர்
ஊராட்சி மன்றம்,
வடக்குமாதேவி ஊராட்சி.

<u>பெறுநர்</u>

1. வேலப்பன், த/பெ.அப்பாவு, 274/B, ஆலம்பாடி ரோடு, பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.
2. மாணிக்கம், த/பெ.மங்கப்பன், 82 வேதநாயகபுரம், காமக்காபாளையம் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம்.
3. கிருஷ்ணகுமார், த/பெ.பழனிவேல், 3/422, தேவியாக்குறிச்சி அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.